முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

OS.No.677/2019 பெயர் : ஆறுமுகம் நாள் : 26.03.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

இந்த வழக்கு போட்டுள்ள நல்லாயி வகையறா தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களையும் விற்றதாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். பெரியராமசாமி, செங்காயி அம்மாள் மற்றும் அவரது பிள்ளைகள் சேர்ந்து ஒரு சீரங்காயி என்பவருக்கு தாவா சொத்தை தவிர்த்து, மற்ற சொத்துக்களை விற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்த போது என்ன ஆவணம் என தெரிந்து கொள்ளாமலேயே தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பெரியராமசாமி கவுண்டரின் வாரிசுகள் வருதம்மாள் என்பவருக்கு சொத்துக்களை கிரையம் செய்த விபரம் தெரியுமா என்றால், தெரியும். சீரங்காயின் வாரிசுகள் யார் யார் என்றால், எனக்கு அதுப்பற்றி தெரியாது. பெரியராமசாமி கவுண்டரிடமிருந்து கிரையம் பெற்ற வருதம்மாள் 6 செண்ட் பூமியை சீரங்காயிக்கு கிரயம் செய்த விபரம் தெரியுமா என்றால், தெரியும் (பி.வா.சா.ஆ2). சீரங்காயின் இறப்பிற்கு பின்னிட்டு, அவரது வாரிசுகள் ஒரு முத்தம்மாளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.1 எழுதி வைத்தார்கள் என்றால், சரிதான். தாவா சொத்துக்கள் வேறு சொத்துக்கள் என்றாலும், முத்தம்மாள் சீரங்காயிக்கு விற்ற சொத்துக்கள் வேறு சொத்துக்கள் என்றாலும், அதைப்பற்றி எனக்கு தெரியாது. சின்னராமசாமி வகையாறவும், ராமசாமி வகையறாவும் சேர்ந்து எழுதிக் கொண்ட வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் படி மகேஷ்வரி, கண்ணம்மாள், ராசாத்தி, நாகம்மாள் ஆகியோருக்கு A ஷெட்யூல் சொத்தாக ரூ.2 லட்சமும், B ஷெட்யூல் சொத்தாக பூமியும் செல்லமுத்து என்பவருக்கும், C ஷெட்யூல் சொத்தாக பூமியும் லட்சுமி

என்பவருக்கும், D ஷெட்யூல் சொத்தாக செங்கோடன், ஈஸ்வரன், ஆறுமுகம், அங்கமுத்து, தவசி, ரெங்கசாமி, பாப்பாள் ஆகியோருக்கு ரூ.3,50,000/-மும் ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். பாகப்பிரிவினைப் பத்திரத்தின் படி லட்சுமிக்கு 77 செண்ட் ஒதுக்கியுள்ளார்கள் என்றால், சரிதான். அப்படி ஒதுக்கப்பட்ட சொத்துக்களை லட்சுமி தனது வாரிசுகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால், சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் லட்சுமிக்கு ஒதுக்கப்பட்ட C ஷெட்யூல் சொத்துக்களுக்கு பதிலாக, செல்லமுத்துக்கு ஒதுக்கப்பட்ட B ஷெட்யூல் சொத்துக்களை தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்தில் வீடு அமைந்துள்ளதா என்றால், இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீது வேறு சொத்திற்கு உண்டானவை என்று சொன்னால், சரிதான். அதேபோல் லட்சுமி பெயரில் உள்ள கந்தாய ரசீதுகள் என்றால், சரிதான். மின்கட்டண ரசீதுகள் தாவா சொத்துக்கு சம்மந்தமில்லாதவை என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.15 ஆவணம் லட்சுமிக்கு அவரது தாயார் எழுதிக் கொடுத்த சொத்திற்கு கொடுக்கப்பட்ட பட்டா என்றால், சரிதான். புருங்கான் என்ற ராமசாமியின் மனைவி பெயர் மாரியாயி என்றால், சரிதான். மாரியாயி அவரது மகள் நாகம்மாள் பெயருக்கு ஒரு சொத்து 09.11.1976 வெகு காலத்திற்கு முன்பே புஞ்சை ஏக்கர் 70 செண்ட் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்துக்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்று சொன்னால், சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் தனக்கு 3 ஆண்மக்கள் இருப்பதாக பெரியராமசாமி, சின்னராமசாமி, அம்மாசை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால், சரிதான். தாவா சொத்தில் பெரியராமசாமியின் வாரிசு என்ற

முறையில் வாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் பெரியராமசாமியின் வாரிசுகளை சேர்க்காமல், நாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினைப் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. ஏற்கனவே சொத்துக்கள் பாகப்பிரிவினை ஆகிவிட்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.